KALAIKESARI

# கலைக்கேசரி

• CULTURE • HERITAGE • TRADITION • EVENTS • FASHION • INTERVIEWS • ENTERTAINMENT

VOLUME : 04 ISSUE : 05 Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / News / 70 / 2013



## தமிழரின் தனித்துவமும் சோழராட்சியும்

## சீனாவில் இஸ்லாமிய கட்டிடக்கலை

| | | |
|---|---|---|
| INDIA..............INR 100.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA...SLR 125.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 6.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 7.00 |

www.kalaikesari.com / May 2013

# மட்டக்களப்பில் மற்றுமோர் பெருங்கற் பண்பாட்டுத் தளம்

கௌரி புண்ணியமூர்த்தி, தற்காலிக உதவி விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.

உலகளாவிய ரீதியில் மனித சமுதாயத்தின் ஆரம்ப காலம் பழைய கற்காலம், குறுணிக் கற்காலம், புதிய கற்காலம் என்று காலக்கிரம வரிசையில் வகை செய்யப்பட்டு நோக்கப்படுகின்றது. ஆதியான மனிதன் பல்லாயிரம் ஆண்டுகளாக பல யுகங்களாக எதுவித முன்னேற்றமும் இன்றி வாழ்ந்தான். அது பழைய கற்காலம் என்று சொல்லப்படுகின்றது. இலங்கையில் பழைய கற்கால மக்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் கிடைக்கின்றன. அது குறுணிக் கற்காலப் பண்பாடாக ஒரு காலத்தில் மாற்றம் பெற்றது. இலங்கையில் யாழ்ப்பாண தீபகற்பம், அதனை சுற்றியுள்ள தீவுகள் என்பவற்றைத் தவிர ஏனைய பாகங்களில் இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் உண்டு.

அதற்கு அடுத்ததாகவே பெருங்கற்கால பண்பாடு அறிமுகமாகின்றது. பெருங்கற் பண்பாட்டை உருவாக்கிய மக்கள் இறந்தோரை அடக்கம் செய்வதற்கு பெருங் கற்களால் ஆன ஈமச்சின்னங்களை அமைத்தமையினால் இவர்கள் காலப் பண்பாடு 'பெருங்கற்காலப் பண்பாடு' என்ற பெயர் பெறுகின்றது. இவ்வீமச் சின்னங்கள் கற்பதுக்கை (Chirn Circle), ஈமப்பேழை (Sarcophagus), கற்திட்டை (Dolman), குத்துக்கல் (Menhir),



புராதன காலத்தில் ஈழத்துடன் நடைபெற்ற வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலமாக இங்கு வந்தடைந்த மட்பாண்டமே இதுவாகும். முருக்கன் தீவில் கிணறு வெட்டும்போது ஐந்தடி ஆழத்தில் இந்த மட்பாண்டம் கிடைக்கப் பெற்றது.

கல்வட்டம் (Stone Circle), முதுமக்கள் தாழி (Urn) ஆகிய பகுதிகளைக் கொண்டதாகக் காணப்படும். இருப்பினும் கற்களால் மட்டுமே இம்மக்கள் ஈமச் சின்னங்கள் அமைக்க வில்லை. தாழிகளிலும் குழிகளிலும் அடக்கம் செய்தனர்.

பெருங்கற் பண்பாடு இந்திய துணைக் கண்டத்தில் அதன் தென்பகுதியிலே கி.மு 1000 ஆம் ஆண்டிலிருந்து அறிமுகமாகி வளர்ச்சியடைந்தது. காலத்தால் முற்பட்ட அதன் சின்னங்கள் கர்நாடகாவில் காணப்படுகின்றன. அப்பண்பாடு தெற்கு நோக்கி பரவியது. தமிழகம், கேரளம், ஆந்திர தேசம் மேற்கு, தெற்கு பகுதிகளுக்கும் பரவியது. அங்கிருந்து அது இலங்கையை அடைந்தது. தென்னிந்தியாவில் நாகரிக அபிவிருத்திகளுக்கு அதனை அறிமுகம் செய்த மக்கள் காரணமாக இருந்தனர். பெரும் கிராமங்கள், நகரங்கள், பெருமளவிலான விவசாயம், சிறுகைத் தொழில்கள், இரும்பின் உபயோகம், அரசனது தோற்றம் ஆகியன யாவும் இதன் மூலமாகவே தோன்றின. இப்பண்பாட்டின் பிரதான அம்சங்களாக இரும்புப் பொருட்கள், கரும் செம் மட்பாண்டங்கள், ஈமக்கல்லறைகள், தாழிகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மக்கட் குடியிருப்புகள், ஈமச்சின்னங்கள், வயல்கள், குளங்கள்

பெருங்கற்படைக்காலப் பண்பாடு கி. மு. ஏழாம் நூற்றாண்டு காலப் பகுதியில் இலங்கையில் பரவத்தொடங்கியது. பெருங்கற்படைக்காலப் பண்பாட்டின் சிறப்பம்சங்களாக கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள், சிப்பிகள், சங்குகள், நடுகற்கள், தமிழ் பிராமி எழுத்துக்கள் போன்றன குறிப்பிடத்தக்கவை. இவையாவும் முருக்கன் தீவில் பொதுமக்கள் கிணறு வெட்டும்போதும், குழிதோண்டும்போதும் சாதாரணமாக வயல் வேலைகளில் ஈடுபடும்போதும் கண்டெடுக்கப்படுகின்றன. இவ்வாறு கண்டெடுக்கப்படும் பொருட்களை ஆய்வு செய்யும்போது இப்பகுதி பெருங்கற்படைக்காலப் பண்பாடு நிலவிய பிரதேசம் என்பதை துல்லியமாக உணர்த்துகின்றது. இதுவரை அடையாளம் காணப்படாத வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முருக்கன் தீவு பூரணமான ஆய்விற்கு உட்படுத்தப்படுவதனூடாக மட்டக்களப்பு வரலாறு ஒரு திருப்புமுனையாக மீள்எழுச்சி பெறும்.

இவையாவும் ஒருங்கிணைந்ததே இக்கலாசாரமாகும்.[1] இரும்பின் உபயோகம் மனித சமுதாயமானது சூழலை கட்டுப்படுத்தவும் வாழ்க்கைக்கு பயன்படுத்திக் கொள்ளவும் பெரிதும் உதவியது.

கி.மு 7 ஆம் நூற்றாண்டளவில் பெருங்கற் பண்பாடு இலங்கையில் பரவத் தொடங்கியது. பல்வேறு காரணங்களின் நிமித்தம் தென்னகத்திலிருந்து இலங்கையின் வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு, கிழக்கு கரையோரங்களை இப்பண்பாட்டு மக்கள் சென்றடைந்தனர். யாழ்குடா நாட்டிலும் அதை சூழ்ந்துள்ள தீவுக்கூட்டங்களிலும் குடியேறியவர்களில் அவர்களே முதன்மையானவர்கள். ஏனைய இடங்களில் அவர்கள் குறுணிக் கற்கால மக்களோடு கலப்புற்றனர். இலங்கையில் பொம்பரிப்பு, ஆனைக்கோட்டை, கந்தரோடை, மாந்தை, அக்குறுகொட, பின்வேவ, உகந்தை, கரம்பன்குளம், கதிரவெளி, அம்பாந்தோட்டை, அனுராதபுரம், திஸ்ஸமாகாராம முதலான பல பகுதிகள் பெருங்கற் பண்பாட்டு மையங்களாக ஆய்வாளர்களால் அடையாளங் காணப்பட்டுள்ளன.[2]

மட்டக்களப்பில் கதிரவெளி எனுமிடத்தில் பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இங்கு மகாவலி ஆற்றின் கழிமுகப் பகுதியில் 'குரங்கு படையெடுத்த வேம்பு' எனப்படும் இடத்தில் பாறைக்கற்களால் அமைக்கப்பட்ட கற்கிடை அடக்கங்கள்





காணப்படுகின்றன. 1920 களிலிருந்து தொல்லியல் தளத்தின் முக்கியத்தவம் அறியப்பட்டிருந்தாலும் இங்கு முழுமையான ஆய்வு நடத்தப்படவில்லை. பெருங்கற் காலத்தில் இப்பகுதியில் முக்கியமான ஒரு குடியிருப்பு இருந்திருக்க வேண்டும் என்பதற்குச் சுற்றாடலில் காணப்படும் வேறு தொல்லியல் சான்றுகள் உறுதி கூறுகின்றன. பிராமிக் கல்வெட்டுகள் இங்கிருந்து கிட்டிய தூரத்தில் சேருவில, இலங்கைத்துறை, ஈச்சிலம்பத்தை ஆகிய இடங்களில் உள்ளன. அத்துடன் இலங்கைத்துறையில் கரும் செம் கலவோடுகள் கிடைத்துள்ளன.[3]







கதிரவெளியின் கற்கிடை அடக்கங்கள் வெளிப்படுத்தும் ஆதி இரும்பு பண்பாட்டின் செல்வாக்குத் தென்னிந்தியாவின் தமிழ் நாட்டுப் பகுதியிலிருந்து மட்டுமன்றி ஆந்திரா மற்றும் கேரளம் ஆகிய இடங்களிலிருந்தும் வந்திருக்க முடியும். கொச்சிப் பகுதியில் இத்தகைய கற்கிடை அடக்கங்கள் காணப்படுகின்றன. அத்துடன் கதிரவெளியில் கற்களை நீள்சதுர சலாகைகளாக வெட்டியெடுத்து பூமியில் பதித்து வைத்திருந்தனர். இது யக்க வழிபாட்டுடன்

தொடர்புபட்டது என பேராசிரியர் பரணவிதான கூறுகின்றார்.[4] தென்னிந்தியாவில் இத்தகைய கற்சலாகைகள் மூலம் நடுகல் வணக்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கதிரவெளியில் நடுகல் வழிபாடும் பேணப்பட்டது என்பது தெளிவாகின்றது.

கிழக்கு கரையோரத்தின் தென்பகுதியிலும் தென் மாகாணத்தின் கிழக்குப் பகுதியிலும் சில இடங்களில் தென்னிந்தியாவிலிருந்து பரவிய பெருங்கற் பண்பாட்டிற் குரிய சின்னங்கள் கிடைத்துள்ளன. ஆற்றுவழியாக இப்பண்பாடு பரவியமையினைக் குறிக்கும் வண்ணமாக ஆறுகளின் கழிமுகப் பகுதிகளிலேயே தொல்பொருட் சான்றுகள் கிடைத்துள்ளன.

அம்பாறையின் தென்னெல்லையான குமுக்கன் ஓயாவிற்கு வடக்கே உள்ள பல இடங்களில் பெருங்கற் பண்பாட்டிற்குரிய கரும் செம் கலவோடுகள் கிடைத்துள்ளன. பாணமைப் பகுதிகளிலும் இவ்விதமான தொல்பொருட் சின்னங்கள் காணப்படுகின்றன. அதற்குத் தெற்கில் உகந்தையில் பெருங்கற் பண்பாடுக் கால ஈமக் கற்கிடக்கைகள் இருப்பதை 1920 களில் சிலர் அவதானித்துள்ளனர்.[5]

இவ்வாறு ஆய்விற்கு உட்படாது பல இடங்கள் காணப்படுகின்ற அதேநேரம், கிழக்கில் இதுவரை அடையாளங் காணப்படாத பெருங்கற்கால தளங்களும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே கோரளைப்பற்று தெற்குப் பிரதேசத்திற்குட்பட்ட கிராமமே முருக்கன் தீவு. பிரதான வீதியிலிருந்து ஏறத்தாழ 1.5 கி.மீ தூரத்தில் அமைந்திருக்கும் கிண்ணையடி எனும் பழம்பெரும் ஊரினூடாகச் சென்று, கிண்ணையடி ஆற்றைக் கடந்து சென்றால் முருக்கன் தீவு அமைந்துள்ளது.

பழைமை வாய்ந்த இவ்வூரின் தொல்லியற் தடயங்களைக் கண்டறியும் ஆய்வு முயற்சியொன்று கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களாகிய அ.சதானந்தன், க.சந்திரமேகன், க.சிவதர்ஷன் ஆகியோரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. அம்முயற்சியின் பயனாக அவ்வூரின் தொன்மையை வெளிப்படுத்தும் வகையிலான சான்றுகள் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரியது.

முருக்கன் தீவுப் பிரதேசத்தில் ஏறத்தாழ 50 குடும்பங்கள் வசிக்கின்றனர். அவர்கள் சேனைப் பயிர்செய்கை, மாடு மேய்ப்பு, விவசாயம், மீன்பிடி போன்றவற்றை தமது வாழ்வாதாரத் தொழில்களாக மேற்கொள்கின்றனர். இம்மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணலின் படி 1950 ஆம் ஆண்டுக்கு முன்னர் இவ்வூரில் ஐந்தாறு குடும்பங்கள் வாழ்ந்ததாகவும், பின்னர் பல குடும்பங்கள் கிண்ணையடி முதலான ஊர்களிலிருந்து வந்து வாழத் தொடங்கியதாகவும் கூறப்படுகின்றது. இங்கு முருகனாலயம் ஒன்று அமைந்துள்ளது. மக்கள் நீண்ட காலத்திற்கு முன்னரே இவ்விடத்தில் வேல் வைத்து முருகனை வழிபடத்தொடங்கியுள்ளனர். ஆயினும் கோயிற் கட்டடம் 1986 ஆம் ஆண்டளவிலே தான் கட்டப்பட்டுள்ளது.

இந்த முருகன் கோயிலின் முன்றலில் படிக்கற்களாக இரு நீள்சதுரமான கற்துண்டுகள் போடப்பட்டுள்ளன. ஏறத்தாழ ஆறு அடி நீளமானவையாக இவை காணப்படுகின்றன. செம்மையாக வெட்டப்பட்ட இக்கற்களை தற்செயலாக நோக்கிய போது மேலிருந்த கல்லில் சில எழுத்துக்களை எம்மால் அவதானிக்க முடிந்தது. எனவே அதனைச் சுத்தம் செய்து பார்த்தபோது, அதில் கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி நான்காம் நூற்றாண்டு வரை தென்னாசியத் துணைக்கண்டத்தில் எழுதப்பட்ட ஆவணங்களில் காணப்பட்ட பிராமி எனும் வகைக்குரிய வரிவடிவங்களைக் காணமுடிந்தது. தமிழகத்தில் வழங்கிய இந்த எழுத்து முறையில் தமிழுக்குச் சிறப்பான எழுத்துக்களான ழ,ள,ற,ன ஆகியன அமைந்து இருந்தமையால் அது தமிழ் பிராமி (தமிழி) என்று அழைக்கப்பட்டது.


இலங்கையில் ஏறத்தாழ 2000இற்கு மேலான பிராமிச் சாசனங்கள் கிடைத்துள்ளன. அவற்றில் பிராகிருதச் சொற்களுடன், தமிழ் மொழிச் சொற்களும் காணப்படுகின்றன. 'கி.மு முதல் மூன்று நூற்றாண்டுகளில் இலங்கையில் தமிழ் ஒரு பேச்சு மொழியாக



தமிழி எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ள நடுகல்



பெருங்கற் காலத்தில் இறந்தோரின் நினைவாக எழுப்பப்பட்ட குத்துக்கல்



முருக்கன்தீவில் கண்டறியப்பட்ட கற்சலாகையில் எழுதப்புட்ட தமிழ்பிராமி சாசனம்

விளங்கியமைக்கு ஆதாரமாய் பிராமிச் சாசனங்கள் அமைகின்றன' என பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் தமது 'இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளமை இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது.[6] அளவிற் சிறிய இச்சாசனங்கள் பெரும்பாலும் தான சாசனங்களாகவே அமைகின்றன.

முருக்கன் தீவில் கிடைத்த சாசனத்தை வாசிக்க முற்பட்டபோது அதனை முழுவதுமாக எம்மால் வாசிக்க முடியவில்லை. மேல்வருமாறு அவற்றை அடையாளம் காண முடிந்தது.

இவ்வெழுத்துக்களை ஓரளவு தெளிவாக வாசிக்க முடிந்தது. 'மரத' எனும் இச்சொல்லை மற்றைய எழுத்துக்களை விடத் தெளிவாக வாசிக்க முடிந்தது. இச்சொல்லை நாம் மருதம் எனக்கருதுகிறோம். 'மருதம்' என்பது வயலும் வயல் சார்ந்த பிரதேசத்தையும் குறிக்க பழந்தமிழ் இலக்கிய காலம் முதல் பயன்படுத்தப்பட்டு வந்த சொல்லாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்ற போது வயல்கள் நிறைந்த பகுதியில் கிடைத்துள்ள இச்சாசனம் வயலுடன் தொடர்புடைய ஏதோவொரு நிகழ்ச்சியை குறிப்பிடுகின்றது என நாம் கொள்ள முடியும். எனினும் சாசனத்தின் ஏனைய எழுத்துக்கள் தெளிவாகத் தெரியாத நிலையில் அந்நிகழ்ச்சி யாதென்பது பற்றிய விவரங்களை அறியமுடியவில்லை. அக்கற்பலகை நீண்ட காலமாக படிக்கற்களாக பயன்படுத்தப்பட்டமையால் வாசகத்தின் பிற்குதி பெருமளவில் சிதைவடைந்துள்ளது.

இக்கற்பாறைகள் சில வருடங்களின் முன்பு கோயிலிற்குப் பின்புறத்தில் ஏறத்தாழ 15 மீற்றர் தொலைவில் குழிகளை வெட்டியபோது கிடைத்தவையாகும். அக்குழிகளை வெட்டிய ஒருவருடன் நாம் தொடர்புகொண்ட போது சில வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை எம்மால் அறிந்து கொள்ள முடிந்தது. அவ்வூர் மக்கள் சில தேவைகளின் பொருட்டு குழிகளை அவ்விடத்தில் வெட்டியபோது சீராக வெட்டப்பட்ட நீள்சதுர வடிவிலான ஏராளமான கற்சலாகைகள் காணப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு சலாகைகளே கோயிலின் முன்றலில் போடப்பட்டுள்ளவையாகும். ஆயினும் தற்போது அவ்விடம் மண்ணால் மூடப்பட்டுள்ளது. அவற்றினை ஆராய்வதற்கு எவ்வித அனுமதியும் எமக்கு இல்லையாதலால் அவர்கள் கூறியவற்றை எம்மால் உறுதி செய்ய முடியவில்லை. எனினும் இதேபோன்று கற்சலாகைகள் பூமியில் பதித்து வைத்திருந்த நிலையில் கதிரவெளியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை பற்றி நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். எனவே முருக்கன் தீவிலும் யக்க வழிபாடு காணப்பட்டுள்ளது என்பதை பேராசிரியர் பரணவிதான அவர்களின் கூற்றுக்களின் மூலம் தெளிவாக்கிக் கொள்ள முடிகின்றது.


தென்னிந்தியாவில் இறந்த வீரர்களது நினைவாக வீரக்கற்கள் நிறுவப்பட்டன. பழந்தமிழ் இலக்கியங்களான புறநானூறு (12 பாடல்கள்), அகநானூறு (11 பாடல்கள்), ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, ஐங்குறுநூறு, திருக்குறள், தொல்காப்பியம் ஆகிய இலக்கியங்களில் நடுகல் வழிபாடு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பெருங்கற் காலத்தில் இறந்தோரின் நினைவாக குத்துக்கல் (Menhir) எனப்படும் நினைவுக் கற்கள் எழுப்பப்பட்டன. இவை முற்றிலும் உருவம் வரையப்படாதவை. கி.மு. 1000 முதல் கி.மு. 500 வரையான காலத்தில் இந்நிலையைக் காணலாம்.[7] பிற்காலத்தில் அவற்றில் வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டது. பொதுவாக ஆணிரை மீட்பின் போது இறந்த வீரர்களின் நினைவாக இவை நடப்பட்டன. பின்னர் இவற்றில் எழுதப்பட்டதுடன் உருவங்களும் வரையப்பட்டன. புலிமான்கொம்பை, தாதப்பட்டி, பொற்மணற்கோட்டை முதலான இடங்களில் நடுகற்கள் கிடைத்துள்ளன. நடுகற்கள் வீரர்களுக்காக மட்டுமின்றி வீரத்துடன் போராடி உயிர்துறந்த கோழி, நாய் (அரசிலாபுரம், எடுத்தனூர்) என்பவற்றுக்கும் எடுக்கப்பட்டன.

முருக்கன் தீவுப்பகுதிகளில் நடுகல் வழிபாடு நடைபெற்றமைக்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. இங்கு அமைந்துள்ள முருகன் கோவிலின் பின்புறம் உள்ள காணியில் மூன்று குத்துக் கற்களை எம்மால் அவதானிக்க முடிந்தது. இவை சீராக வெட்டப்பட்டவாறு காணப்படுகின்றது. அத்துடன் முருக்கன் தீவை அடுத்துள்ள ஊரான சாராவெளியில் ஓரிடத்தில் இத்தகைய கற்களை ஏராளமாகக் கண்டோம். இவை யாவும் சீராக

வெட்டப்பட்டு ஏதோவோர் ஒழுங்கில் மண்ணில் புதைக்கப்பட்டுள்ளமையினை எம்மால் அவதானிக்க முடிந்தது. தற்போது இவ்விடத்தில் வைரவருக்குரிய பந்தல் அமைக்கப்பட்டு பூசைகள் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் கருங்காலிப்படிபட்டி எனுமிடத்தில் நடுகல் நடப்பட்ட இடத்தில் தற்போது வைரவர் வழிபாடு நடத்தப்பட்டு வருகின்றமையை இங்கு சுட்டிக்காட்டல் அவசியமாகும். முருக்கன் தீவில் உள்ள கற்கள் நடுகற்களாகவே இருத்தல் வேண்டும். அவ்வாறாயின் புராதன காலத்தில் இப்பிரதேசத்தில் நடுகல் வழிபாடு நடைபெற்றுள்ளமை தெளிவாகின்றது.

பிராமிச் சாசனம், நடுகல் என்பனவற்றுடன் மேலும் சில தொல்பொருட் தடயங்கள் எமக்குக் கிடைத்தன. அவ்வூரவர் ஒருவருக்கு கிணறு வெட்டும் போது ஏறத்தாழ 5 அடி ஆழத்தில் சிதைவுறாத நிலையில் மட்குடமொன்று கிடைத்துள்ளது. மிகக்கனமானதாகவும் சிவப்பு நிற மட்பாண்டமாகவும் இது காணப்படுகின்றது. அதில் ஒரே மாதிரியான அலங்கார வேலைப்பாடுகள் வரையப்பட்டுள்ளன. ஆயினும் அதில் எவ்வித எழுத்துக்களோ குறியீடுகளோ காணப்படவில்லை. இது உரோமர்களது மட்பாண்டங்களைப் பின்பற்றி இந்தியாவில் உருவாக்கப்பட்ட றொலாட்டட் மட்பாண்டமாக இருத்தல் வேண்டும். புராதன காலத்தில் ஈழத்துடன் நடைபெற்ற வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலமாக இங்கு வந்தடைந்த மட்பாண்டமே இதுவாகும். இலங்கை மற்றும் தமிழகத்திலும் பெருங்கற் கலாசாரத் தளங்களில் இத்தகைய மட்பாண்டங்கள் கிடைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

முருக்கன் தீவின் பல பகுதிகளிலும் ஏறத்தாழ 8, 9 அடிகள் தோண்டினால் சிவப்பு நிற மட்பாண்ட ஓடுகளை



முருக்கன் தீவில் காணப்படும் முருகன் கோவில்

காண முடியும் என அவ்வூர் மக்கள் தெரிவித்தனர். முருக்கன் தீவில் மட்டுமின்றி அதனை அடுத்துள்ள சாராவெளி முதலான ஊர்களிலும் கிணறு முதலிய தேவைகளுக்காக குழிகளைத் தோண்டிய போது இத்தகைய மட்பாண்டத் துண்டுகள் கிடைத்துள்ளதாக மக்கள் குறிப்பிட்டனர். சாராவெளியில் உள்ள பிள்ளையார் கோவிலிற்கான தீர்த்தக் கிணற்றிற்கான குழி தோண்டிய போது கிடைத்த சில மட்பாண்டத் துண்டுகளை எம்மாற் காணமுடிந்தது. இப்பகுதிகளில் பொதுவாக இரண்டு அடிகளுக்கு மேல் தோண்டினால் கடற் சிப்பிகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. தாம் பல்வேறு தேவைகளின் நிமித்தம் மடுக்களைத் தோண்டிய போது கிடைத்த சில கடற் சிப்பிகளையும் எமக்குக் காட்டினர்.

பெருங்கற்படைக்காலப் பண்பாடும் தமிழ் பிராமிச் சாசனங்களின் மொழி வழக்கும், அது அடையாளப் படுத்தும் பண்பாட்டு மரபுகளும் நெருங்கிய தொடர்புடையவை. அத்துடன் பெருங்கற்படைக்காலப் பண்பாட்டின் சிறப்பம்சங்களுள் கறுப்பு, சிவப்பு நிற மட்பாண்டங்கள் சிப்பிகள், சங்குகள், நடுகற்கள், பிராமிக் கல்வெட்டு போன்றன குறிப்பிடத்தக்கவை. இவையாவும் முருக்கன் தீவில் கிடைத்தமை இப்பகுதி பெருங்கற்படைக்காலப் பண்பாடு நிலவிய பிரதேசம் என்பதை எம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்றது. ஆயினும் அதனை உறுதிசெய்வதற்கு மேலும் பல ஆதாரங்கள் எமக்குத் தேவைப்படுகின்றன. அதற்கு சட்டரீதியான அனுமதியுடன் கூடிய ஆதரவு தேவை. இப்பகுதியானது முழுமையான தொல்லியல் அகழ்வாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டியது இன்றியமையாததாகும். அவ்வாறு ஆய்வு மேற்கொள்ளப்படுவதனூடாக மட்டக்களப்பில் அடையாளங் காணப்பட்டுள்ள பெருங்கற் பண்பாட்டுத் தளமான முருக்கன் தீவின் வரலாறும் வெளிக்கொண்டுவரப்படும். இது மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தை மட்டுமே நம்பியுள்ள மட்டக்களப்பு பிராந்தியத்தின் வரலாற்றைத் தெளிவாக்கும் என்பதில் எவ்வித கருத்து வேறுபாடுமில்லை.

**உசாத்துணை:**

1. சிற்றம்பலம்.சி.க, யாழ்ப்பாணம்- தொன்மை வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, 1993
2. இந்திரபாலா.கா, இலங்கையில் தமிழர், குமரன் புக் ஹவுஸ், 2006
3. இந்திரபாலா.கா, இலங்கையில் தமிழர், குமரன் புக் ஹவுஸ், 2006, பக்-102-103
4. Ceylon Journal of Science, Vol.ii-1928 December 1933 February,pp.94-95
5. www.puthinappalakai.com
6. பத்மநாதன்.சி, இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்-கொழும்பு, 2006
7. கிருஷ்ணமூர்த்தி.ச, நடுகற்கள், மெய்யப்பன் பதிப்பகம், 2004